நாட்டுக்கோழி இனங்களும், கோழிகளுக்கான கொட்டகை மற்றும் பண்ணை அமைத்தல்

முனைவர். இரா.செல்வராஜ்
பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், ஈரோடு.

நாட்டுக்கோழி இனங்களானது அசல் நாட்டுக்கோழி இனங்கள் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட நாட்டுக்கோழி இனங்கள் என இருவகைப்படும். இந்தியாவில் சுமார் 17 வகையான அசல் நாட்டுக்கோழி இனங்கள் கண்டறியப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அவைகள்

1.	அசீல்	2.	அங்கலேஸ்வர்	3.	பாஸ்ரா
4.	சிட்டகாங்	5.	டாங்கி	6.	டாதிகிர்
7.	கேகஸ்	8.	காரிங்கட்டா	9.	கடக்நாத்
10.	கலாஸ்தி	11.	கர்மிர் பாவோரோலா	12.	முரி
13.	நிக்கோபாரி	14.	பஞ்சாப் பழுப்பு	15.	தலைச்சேரி
16.	மீவாரி	17.	கவ்னேயன்		

1. அசீல்:

நாட்டுக்கோழிகளிலேயே, தோற்றப்பண்புகள் அடிப்படையில் அசீலே முதன்மையான இனம் ஆகும். இவ்வகை இனமானது, சுறு சுறுப்பாகவும், அதிக வலிமையுடனும், கம்பீரமான நடையுடனும், சிறந்த சண்டை இடும் திறனும் கொண்டதாக விளங்குகின்றது. சிறந்த அசல் அசீல் நாட்டுக்கோழி இனமானது ஆந்திர பிரதேசத்தில் உள்ள கிழக்கு கோதாவரி, விசாகப்பட்டினம், விஜயநகரம் மாவட்டங்களிலும், சட்டீஸ்கர் மாநிலத்தில் உள்ள தாண்டவடே மாவட்டத்திலும், உத்திர பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களிலும் அசல் அசீல் இனங்கள் காணப்படுகின்றன. அசீல் இனத்தில் நிறம் மற்றும் இறக்கைகளின் அமைப்பு போன்றவற்றை அடிப்படையாக கொண்டு பல்வேறு வகைகள் உள்ளன. தமிழகத்தில் காகம், மயில், வல்லூறு, கீரி என்ற பலவகையான அசீல் கோழி இன வகைகள் உள்ளன. மற்ற நாட்டு கோழி இனங்களை ஒப்பிடும் பொழுது இதன் இறைச்சியின் சுவை தனிச்சிறப்பு வாய்ந்தது ஆகும். அசீல் இன பெட்டைக் கோழிகள் அதிகளவு தாய்மைப்பண்பு கொண்டது ஆகும். சிறந்த முறையில், முட்டைகளை அடைகாத்து, குஞ்சு பொரிக்கும் திறனை கொண்டுள்ளது. இளம் கோழி குஞ்சுகளை சிறந்த முறையில் பராமரிக்கும் திறனை கொண்டுள்ளது.

இவ்வகை இன கோழிகளில் தாடைப்பகுதியில் உள்ள தொங்கான் மற்றும் காது கதுப்புகள் ஆழ்ந்த சிவப்பு நிறத்திலும், தசைகளற்ற நீண்ட, உறுதியான கழுத்துப் பகுதியும், அகன்ற மார்புப் பகுதியையும் கொண்டதாக காணப்படும். வால் பகுதியில் உள்ள இறக்கைகள் கீழ் நோக்கி வளைந்த நிலையில் காணப்படும். ஒரு முதிர்ந்த சேவலின் எடையானது, சராசரியாக 4 முதல் 5 கிலோ வரையிலும், பெட்டைக் கோழியானது, 3 முதல் 4 கிலோ வரையிலும், 20 வார வயதில் சராசரியாக 1220 கிராம் எடையுடனும் காணப்படும். அசீல் இன பெட்டைக் கோழியானது, தனது முதல் முட்டையை 196வது நாள் வயதில் இடும். வருடத்திற்கு சுமார் 90 முட்டைகள் இடும் திறன் கொண்டது. முட்டையின் எடையானது 40 வார வயதில் 40-45 கிராம்

என்ற அளவிலும், கருவுற்ற முட்டை இடும் திறனானது 66% ஆகவும், குஞ்சு பொரிக்கும் விகிதாச்சாரம் 63% ஆகவும் காணப்படும்.

2. அங்கலேஸ்வர்:

இவ்வகை நாட்டுக்கோழி இனமானது, குஜராத் மாநிலத்தில் உள்ள பவ்ரோச் மற்றும் நர்மதா மாவட்டத்தில் தோன்றியது ஆகும். பவ்ரோச் மாவட்டத்தில் உள்ள அங்கலேஸ்வர் மாவட்டத்தில் தோன்றியதால், அப்பகுதியின் பெயரிலேயே இவ்வகை இனங்கள் அழைக்கப்படுகின்றன. இவ்வகை, இனமானது, பவ்ரோச் மாவட்டத்தை சுற்றியுள்ள மாவட்டங்களிலும் காணப்படுகின்றது. இதன் தலைப்பகுதியில் இளம் சிவப்பு நிறத்தில், ஒற்றை கொண்டைப்பூவானது காணப்படும். வருடத்திற்கு சுமார் 81 முட்டைகள் இடும் திறனுடையது. பெட்டைக் கோழிகளானது, 181 நாள் வயதில், தனது முதல் முட்டையை இடத் தொடங்கும். சராசரி முட்டை எடையானது சுமார் 34.3 கிராம் என்ற அளவில் இருக்கும். இவ்வகை இனத்தில் கருவுற்ற முட்டையானது சுமார் 91.3% என்ற அளவிலும், அதன் குஞ்சு பொரிப்பு திறன் சுமார் 92.4மூ என்ற அளவிலும் இருக்கும். இவ்வகை இனத்தின் சேவல்கள், 8 வார வயதில் சுமார் 542 கிராமும், பெட்டைக் கோழிகள் சுமார் 450 கிராமும், 72 வார வயதில் சேவல்கள் 1800 கிராமும், பெட்டைக் கோழிகள் 1578 கிராம் என்ற அளவில் இருக்கும். தென் குஜராத் பகுதியில் வாழும் பழங்குடி இன மக்களால் இவ்வகை நாட்டுக்கோழி இனமானது பேணி பாதுகாக்கப்படுகின்றது.

3. பாஸ்ரா:

இவ்வகை நாட்டுக்கோழி இனமானது, மகாராஸ்டிராவில் தூலே மாவட்டத்தில் உள்ள நந்தூர்பர் மற்றும் சாக்ரி தாலுகாஇ குஜராத்தில் சூரத் மாவட்டத்தையும் தனது தாயகமாக கொண்டது. இதன் கழுத்து, முதுகு மற்றும் வால் பகுதியில் உள்ள சிறகுகள் வெண்மை மற்றும் கருமை கலந்த நிறத்தில் திட்டு திட்டாக காணப்படும். தோல் மற்றும் இயற்கை பகுதியில் உள்ள சிறகுகள், செந்நிறத்தில் காணப்படும். ஒற்றை சிவப்பு நிற கொண்டைப்பூவும், மஞ்சள் நிற அலகும், சிவப்பு நிற தொங்கானும் காணப்படுகின்றன. முதிர்ந்த சேவலின் எடையானது சுமார் 1 முதல் 1.25 கிலோ கிராமும், முதிர்ந்த பெட்டைக் கோழியின் எடையானது 1 முதல 1.2 கிலோகிராமும் இருக்கும். இவ்வகை இனமானது, தனது முதல் முட்டையை 5 முதல் 7 மாத வயதில் இடும். மேலும், முட்டையின் எடையானது 28 முதல் 38 கிராம் என்ற அளவிலும், வருடத்திற்கு சுமார் 40 முதல் 55 முட்டைகளும், குஞ்சு பொரிப்பு திறனானது 60 முதல் 85% என்ற அளவிலும் இருக்கும்.

4. சிட்டகாங்:

இவ்வகை இனமானது பங்களாதேஸ் மற்றும் அதனை ஒட்டியுள்ள வடகிழக்கு இந்திய பகுதிகளில் அதிகம் காணப்படுகின்றன. கம்பீர நடையுடனும், பல்வேறு வகை நிறங்களுடனும், பெரிய கண்கள், நீண்ட கழுத்து மற்றும் வால் போன்றவற்றுடன் சிறந்த சண்டையிடும் பண்புகளையும் கொண்டுள்ளது. ஒரு முதிர்ந்த சேவலின் எடையானது 3.5 முதல் 4.5 கிலோ கிராமும், ஒரு முதிர்ந்த பெட்டை கோழியின் எடையானது 3 முதல் 4 கிலோ கிராம் என்ற அளவிலும் இருக்கும்.

5. டாங்கி:

இவ்வகை இனமானது ஆந்திராவில் விஜயநகரம் மற்றும் ஸ்ரீகாகுளம் பகுதிகள் மற்றும் அருகிலுள்ள ஒரிசா மாநிலத்திலும் காணப்படுகின்றன. பொதுவாக பழுப்பு நிறத்திலும் சில வேலைகளில் கருமை நிறத்திலும் காணப்படும். சேவல்களின் இறக்கைகள், மார்பு, வால் மற்றும் தொடைப்பகுதியில் உள்ள சிறகுகள் நீல மற்றும் கருமை நிறத்தில் பிரகாசமாக காணப்படும்.

கழுத்துப் பகுதியானது, கருமை நிறத்தில் காணப்படும். ஒரு முதிர்ந்த சேவலின் எடையானது 3.12 கிலோ கிராமும், பெட்டைக் கோழிகளின் எடையானது 2.22 கிலோ கிராம் என்ற அளவிலும் இருக்கும். இவ்வகை இனத்தின் பெட்டைக்கோழிகள் தனது முதலாவது முட்டையை தனது 6-8 மாத வயதில் இடும். முட்டையின் எடையானது 46 கிராம் என்ற அளவிலும் காணப்படும். வருடத்திற்கு சுமார் 25 முதல் 35 முட்டைகளையே இடும் திறனுடையது.

6. டாதிகிர்:

இவ்வகை இனமானது, அசாமில், பஸ்கா, சிராங் மற்றும் உடல்குரி போன்ற மாவட்டங்களில் காணப்படுகின்றன. இதன் சிறகுகளின் நிறமானது வெண்மை மற்றும் கருமை கலந்த திட்டுகள் போன்று காணப்படும். ஒரு முதிர்ந்த சேவலின் எடையானது, சுமார் 1.8 கிலோ கிராமும், ஒரு முதிர்ந்த பெட்டை கோழியின் எடையானது சுமார் 1.6 கிலோகிராம் என்ற அளவிலும் காணப்படும். இவ்வினமானது வருடத்திற்கு சுமார் 60 முதல் 70 முட்டைகள் என்ற அளவில் இடும் தன்மை கொண்டது. முட்டையின் எடையானது சுமார் 44 கிராம் என்ற அளவில் காணப்படும். அசாமில் போடோ பழங்குடியினர் இவ்வகை இவ்வினத்தை பேணிக் பாதுகாத்து வருகின்றனர்.

7. கேகஸ்:

இவ்வினமானது கர்நாடகாவில் கோலார் பகுதி மற்றும் அப்பகுதியை சுற்றியுள்ள ஆந்திராவிலும் காணப்படுகின்றன. பொதுவாக இவ்வகை இனங்கள் பழுப்பு அல்லது கருமை நிறத்தில் காணப்படும். சேவல்களின் நிறமானது திட்டுகளாகவும், பெட்டை கோழிகளில் புள்ளிகளாகவும் காணப்படுகின்றன. கழுத்து பகுதியானது, பொன்னிற சிறகுகளால் மூடப்பட்டிருக்கும். இவ்வின சேவல்களின் சராசரி எடையானது 2 கிலோ கிராமாகவும், பெட்டை கோழிகளின் சராசரி எடையானது 1.5 கிலோ கிராம் என்ற அளவிலும் காணப்படும். இவ்வின பெட்டை கோழிகள், தனது முதலாவது முட்டையை 5 முதல் 7 மாத வயதிலும், முட்டை இடும் கால கட்டத்தில், 20 முதல் 26 நாட்கள் கால அளவில் சுமார் 15 முதல் 20 முட்டைகள் என்ற அளவில் இடும், சராசரி முட்டை எடையானது, 40 கிராம் என்ற அளவில் காணப்படும். கர்நாடகா மற்றும் ஆந்திராவில் காணப்படும் நாடோடி இன மக்களே இவ்வினத்தினை பராமரித்து வருகின்றனர்.

8. காரிங்கட்டா கருப்பு:

இவ்வினமானது மேற்கு வங்கம் முழுவதும் காணப்படுகின்றன. இவ்வினமானது கருமை நிறத்திலும் காணப்படும். கால் பகுதியில் வெண்மை காணப்படும். சேவலின் சராசரி எடையானது 1.5 கிலோ கிராமாகவும், பெட்டைக் கோழியின் எடையானது, 1.2 கிலோ கிராமாகவும் உள்ளது. இதன் வருட முட்டை உற்பத்தி திறனானது சுமார் 130 என்ற அளவில் உள்ளது. இவ்வினமானது நல்ல நோய் எதிர்ப்பு சக்தியை கொண்டுள்ளது. மேலும், இதன் சிறந்த அடைகாக்கும் திறமையால் வாத்து உள்ளிட்ட பிற பறவைகளின் முட்டைகளையும் பொரிக்க வைக்கும் ஆற்றலை கொண்டுள்ளது.

9. கடக்நாத்:

மத்தியப்பிரதேசத்தில் உள்ள ஜாபூவா மற்றும் தார் மாவட்டத்தில் உள்ள பழங்குடி இன மக்களால் இவ்வகை இனமானது, பராமரிக்கப்படுகின்றது. இதன் உடலானது கருமை நிறத்தோற்றத்தை கொண்டுள்ளதால், இந்தி மொழியில் இதனை, கலாமாசி என்று அழைக்கிறார்கள். மேலும், இதனை கரக்நாத் என்றும் அழைக்கிறார்கள். இதன் அலகு, தோல், கால்கள், விரல்கள் மற்றும் உள்ளுறுப்புகள் போன்றவையும் கருமை நிறத்தில் காணப்படும். இதன் இரத்தமானது, கருஞ்சிவப்பு நிறத்தில் காணப்படும். சேவல் மற்றும் பெட்டைக் கோழியின்

எடையானது, முறையே 1.5 மற்றும் 1.0 கிலோ கிராம் என்ற அளவில் இருக்கும். முட்டையின் எடையானது, 46 கிராம் என்ற அளவில் வருடத்திற்கு சுமார் 80 முட்டைகளை தர வல்லது. இவ்வகை இனமானது நல்ல சுவையுடைய இறைச்சியை கொண்டுள்ளது. சிறந்த நோய் எதிர்ப்பு திறன் இருந்த போதிலும், மேரக்ஸ் நோய் தாக்குதலுக்கு அதிகளவு உள்ளாகின்றன.

10. கலாஸ்தி:

ஆந்திராவில் நெல்லூர் மாவட்டத்தில் அதிகளவு காணப்படுகின்றன. பொதுவாக, இவ்வினங்கள், கருமை முதல் பழுப்பு நிறம் வரை கொண்டுள்ளது. கழுத்து மற்றும் இறக்கை பகுதிகளில் பொன்னிற சிறகுகள் காணப்படுகின்றன. மேலும், நீளமான கால்களையும் கொண்டுள்ளன. சராசரியாக சேவல் மற்றும் பெட்டைக் கோழிகளின் எடையானது முறையே 2.5 மற்றும் 1.8 கிலோ கிராம் என்ற அளவில் காணப்படும். இவ்வினமானது, தனது முதல் முட்டையை 6 முதல் 8 மாத வயதில் இடும். சராசரி முட்டை எடையானது, சுமார் 42 கிராம் ஆகும். வருடத்திற்கு சுமார் 30 முதல் 40 முட்டைகள் இடும் திறனுடையது.

11. காஸ்'மீர் பேவோரோலா:

கர்'மீரில் கடல் மட்டத்திலிருந்து 1500 முதல் 2000 அடி உயரமுள்ள இடங்களில் வாழும் திறனுடைய சிறிய வகை இனமாகும். சராசரியாக சேவல் மற்றும் பெட்டை கோழிகளின் எடையானது முறையே 1.72 மற்றும் 1.25 கிலோ கிராம் ஆகும். சராசரி முட்டை எடையானது 46 கிராம் ஆகும்.

12. மிரி:

இவ்வினமானது அசாமில் லக்மிபுர் மற்றும் திமாஜி பகுதிகளில் காணப்படுகின்றன. 10 மாத வயதில் இதன் எடையானது, 1 முதல் 1.3 கிலோ கிராம் ஆகும். தமது 168 நாள் வயதில் முட்டையிடத் தொடங்கும். முட்டையின் எடையானது 38 கிராம் ஆகும். வருடத்திற்கு சுமார் 60 முதல் 70 முட்டைகள் இடும் திறனுடையது. அசாமில் மிரி பழங்குடியினர் இவ்வினத்தை பாதுகாக்கின்றனர்.

13. நிக்கோபார்:

நிக்கோபார் தீவுகளில் காணப்படும் சிறிய வகை நாட்டுக்கோழி இனம் ஆகும்.

14. பஞ்சாப் பழுப்பு:

பஞ்சாப் மற்றும் ஹரியானா பகுதிகளில் காணப்படும் இவ்வினமானது பழுப்பு நிறத்தில் காணப்படும். சேவல் மற்றும் பெட்டை கோழிகளின் எடையானது முறையே 2 மற்றும் 1.5 கிலோகிராம் ஆகும். வருடத்திற்கு சுமார் 60 முதல் 80 முட்டைகள் இடும் திறனுடையது. சராசரி முட்டை எடையானது, 45 கிராம் ஆகும்.

15. தலைச்சேரி:

கேரளாவில் கோழிக்கோடு, கண்ணூர், மலப்புரம் மற்றும் மாஹி பகுதிகளில் காணப்படுகின்றன. சேவல் மற்றும் பெட்டை கோழிகளின் எடையானது, முறையே 1.6 மற்றும் 1.2 கிலோ கிராம் ஆகும். வருட முட்டை உற்பத்தி திறன் 60 முதல் 80 ஆகும். சராசரி முட்டையின் எடையானது 40 கிராம் ஆகும்.

16. மீவாரி:

மத்திய மற்றும் தெற்கு பகுதி ராஜஸ்தானில் காணப்படுகின்றன. பொதுவாக, இவ்வினம் இறைச்சிக்காக வேண்டி பராமரிக்கப்படுகின்றன. சேவல் மற்றும் பெட்டை கோழிகளின் எடையானது முறையே 1.9 மற்றும் 1.2 கிலோ கிராம் ஆகும். வருடத்திற்கு சுமார் 37 முதல் 52 முட்டைகள் வரை இடும் திறனுடையது. குறைந்த தீவனத்தை உட்கொண்டு நல்ல உற்பத்தி திறனை கொடுக்க வல்லது.

17. கவ்னேயன்:

மணிப்பூர் மாநிலத்தில் இவ்வினமானது காணப்படுகின்றன. இவ்வினமானது, நீண்ட உடலமைப்பையும், நீண்ட கால்கள் மற்றும் கழுத்துப் பகுதியையும் கொண்டுள்ளது.

தரம் உயர்த்தப்பட்ட நாட்டுக்கோழிகள்:

தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தின் மூலம், நந்தனம் கோழி-1, நந்தனம் கோழி-2, நந்தனம் கோழி-4 மற்றும் நாமக்கல் கோழி-1 போன்றவை வெளியிடப்பட்டுள்ளன. கர்நாடக கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சார்பாக கிரிராஜா கோழியானது வெளியிடப்பட்டுள்ளது. மேலும், ஹைதராபாத்தில் உள்ள கோழி இன ஆராய்ச்சி நிலையத்தின் சார்பாக வனராஜா என்ற தரம் உயர்த்தப்பட்ட நாட்டுக்கோழியானது விவசாயிகளின் பயன்பாட்டுக்காக வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டுக்கோழிகளுக்கான பண்ணை அமைக்கும் முறை:

நாட்டுக்கோழிகளை புறக்கடை கோழி வளர்ப்பாகவும், தீவிர முறையிலும் வளர்க்கலாம். தீவிர முறையில் வளர்க்கும் பொழுது, ஆழ் கூள அல்லது கூண்டு முறை வளர்ப்பை பின்பற்றலாம்.

புறக்கடை கோழி வளர்ப்பானது குறைந்த எண்ணிக்கையிலான நாட்டுகோழிகளை நமது வீடுகளின் கொல்லைப்புறத்தில் வளர்க்கும் முறை ஆகும். இம்முறையில், கோழிகளுக்கு தானிய வகைகள் மற்றும் சமையலறை கழிவுகளை போன்றவற்றை உணவாக கொடுக்கலாம். இம்முறையில் உற்பத்தி செலவு குறைவு ஆகும். பகல் வேலைகளில் நமது வீடுகளுக்கு அருகாமையில் உள்ள தீவனப்புற்கள்இ மற்றும் மண்ணில் உள்ள மண்புழுக்கள் மற்றும் கரையான்கள் போன்றவற்றை உட்கொண்டு தமக்கு தேவையான எரிசக்தி, புரச்சத்துக்கள் மற்றும் தாதுச்சத்துக்கள், உயிர்ச்சத்துக்கள் போன்றவற்றை எடுத்துக் கொள்கின்றன. மேலும், திறந்த வெளியில் மேய்வதன் காரணமாக தேவையான அளவு வைட்டமின் டி சத்துக்களை சூரிய ஒளியிலிருந்து பெற்று வளர்சிதை மாற்றத்திற்கு பயன்படுத்திக் கொள்கின்றன. இரவு நேரங்களில் மரக்கிளைகளிலோ, கூண்டுகளிலோ சுமார் 20 நாட்டுக்கோழிகள் வரை அடைத்து பராமரிக்கலாம்.

தீவர முறையில் நாட்டுக்கோழிகளை வளர்ப்பதற்கு அவசியம் பண்ணை அமைக்க வேண்டும். பண்ணை அமைப்பதற்கு, முதலில் தகுந்த இடத்தை தேர்வு செய்தல் வேண்டும். தேர்வு செய்யப்படும் இடமானது, மழைக்காலங்களில் தண்ணீர் தேங்காதவாறு, மேட்டுப்பாங்கான இடமாக தேர்வு செய்ய வேண்டும். தேர்வு செய்யப்படும் இடத்தில் உள்ள மண்ணானது, களிமண்ணாக இல்லாமலும் மணற்பாங்கான இடமாக இல்லாமலும், இரண்டு கலந்த கலவையாக இருத்தல் வேண்டும். பண்ணை அமைக்கும் இடத்தில் முதலில் தண்ணீர் சோதனை செய்வது அவசியம் ஆகும். கடினத்தன்மை அதிகம் இல்லாமல், மாசற்ற சுத்தமான தண்ணீராக இருத்தல் வேண்டும். கோழிகள் தாம் உண்ணும் தீவனத்திற்கேற்ப 1:1 என்ற விகிதத்தில் தண்ணீர் எடுத்துக்கொள்ளும். ஆதலால், குடிநீர் வசதி உள்ள இடங்களில் பண்ணை அமைப்பது அவசியம் ஆகும். பண்ணை அமைக்க உள்ள இடத்தில் மின்சார வசதி அவசியம் இருத்தல் வேண்டும்.

நாட்டுக்கோழிப்பண்ணையானது, மக்கள் நடமாட்டம் இல்லாத தனிமையான பகுதியாக இருத்தல் வேண்டும். பண்ணையின் அமைவிடமானது, சாலைகளுக்கு அருகில் இருந்தால், கோழிகளை இடமாற்றம் செய்வதற்கும், தீவனம் மற்றும் இதர பொருட்களை பண்ணைக்கு கொண்டு வருவதற்கும், பண்ணையிலிருந்து இடமாற்றம் செய்வதற்கும் வசதியாக இருக்கும்.

கொட்டகை அமைப்பு முறை:

நாட்டுக்கோழி பண்ணை கட்டிடங்களை கிழக்கு மேற்காக அமைப்பதன் வாயிலாக, சூரியக் கதிர்கள் நேரடியாக பண்ணையினுள் சென்று கோழிகளுக்கு அயற்சி ஏற்படாமல் தடுக்கலாம். தரைப்பகுதியில் இருந்து 2 அடி உயரத்திற்கு கருங்கற்களை கொண்டு மேடை அமைக்க வேண்டும். வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் முழு உயர சுவர் எழுப்ப வேண்டும். பின்னர் 1 அடி உயர சுற்றுச்சுவர் செற்களை கொண்டு வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் அமைக்க வேண்டும். பிறகு சுற்றுச்சுவரில் இருந்து ஒன்பது அடி உயரத்திற்கு கம்பி வலையை பதியச் செய்ய வேண்டும். கொட்டகையின் மொத்த உயரம் 12 அடி இருக்க வேண்டும். கொட்கையின் நீளம், நாட்டுக்கோழிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளலாம். கொட்டகையின் அகலம் 25 அடிக்கு மிகாமல் இருக்க வேண்டும். கொட்டகையின் கூரைப்பகுதியை ஆஸ்பெஸ்டாஸ், ஓடு போன்ற பொருட்களை பயன்படுத்தி அமைக்கலாம். கட்டிடத்தின் கதவுகளை பண்ணையின் நீளத்திற்கு ஏற்ப அமைத்துக் கொள்ளலாம். பண்ணையின் உள்ளே, சுமார் 15 அடி நீளத்திற்கு ஒன்றாக தடுப்புகள் அமைக்க வேண்டும். கட்டிடத்தின் கதவுகளுக்கு முன்பாக சாய்தள மேடை அமைக்க வேண்டும். சாய்தள மேடைக்கும் கட்டிடத்திற்கும் இடையே சுமார் 1 அடி இடைவெளி இருக்க வேண்டும். இதன் மூலம் எலி பெருச்சாலி போன்றவை கட்டிடத்திற்குள் செல்வதை தவிர்க்கலாம்.

நாட்டுக்கோழி பண்ணையில் இறக்கும் கோழிகளை எரிப்பதற்காக பண்ணையின் ஓரத்தில், 10 அடி ஆழமும், 3 அடி நீளம் மற்றும் 3 அடி அகலம் கொண்ட சிமெண்ட் தொட்டி அமைத்து மேல்பகுதியில் சிறிய துவாரம் வைத்து சிமெண்ட் பலகையால் மூடி விட வேண்டும். அலுவலக அறையை பண்ணையின் முன்பகுதியில் அமைப்பதன் வாயிலாக, வெளி ஆட்கள் பண்ணைக்குள் செல்வதை தடுத்து விடலாம்.

1. ஆள்கூள முறை

இம்முறையில் சிமெண்ட் தரைப்பகுதியின் மேல், சுமார் 8 முதல் 10 செ.மீ உயரத்திற்கு ஆழ்கூளப் பொருட்களாக நெல், நிலக்கடலை மேல் தோல், தேங்காய் மஞ்சி போன்றவற்றில் ஏதாவது ஒன்றை பரப்பி விட வேண்டும். ஆழ்கூளப்பொருட்களின் ஈரப்பதம் 15 முதல் 20மூ மிகாமலும், பூஞ்சைத் தொற்று மற்றும் கடினத்தன்மை இல்லாமலும் இருக்க வேண்டும். ஈரப்பதம் அதிகம் இருப்பின் சுண்ணாம்புத்துளை, 200 சதுர அடிக்கு 5 கிலோ என்ற விகிதத்தில் கலந்து ஈரப்பதத்தை குறைக்க வேண்டும். இம்முறையில் இறைச்சிக்கென வளர்க்கப்படும் நாட்டுக்கோழிகளுக்கு 1 சதுர அடி இடவசதி கொடுக்க வேண்டும்.

2. கூண்டு முறை

இம்முறையில் நாட்டுக்கோழிகளை கூண்டுகளில் வைத்து பராமரிப்பதால், எச்சமானது, நேரடியாக தரைப்பகுதியில் சேகரமாகின்றது. 3 அடி x 3 அடி x 1.5 அடி அளவுள்ள கூண்டுகளில் 4 ஒரு மாத வயது வரை 30 கோழிகளையும், 40 நாட்கள் வரை 15 கோழிகளையும் 50 நாட்கள் முதல் விற்பனை வயது வரை 10 கோழிகளையும் வைத்து பராமரிக்கலாம்.